**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.209/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.5 |
| Name | : | திரு. ஆண்டவர், காவல் உதவி ஆய்வாளர் |
| Father's/Husband Name: | | திரு. பிச்சைமுத்து |
| Village | : | பெரம்பலூர் காவல் நிலையம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 59/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்.)**

i) நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.05.2022ம் தேதி மங்களமேடு காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்த போது பழனிவேல் மனைவி கொளஞ்சியம்மாள் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப மங்களமேடு காவல் நிலைய குற்ற எண் 174/2022 சட்டப்பிரிவுகள் 294(b),323,506(2) of IPC and 4 of TNPHW Act ன்படி எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். **புகார் மற்றும் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ4 மற்றும் அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 14.05.2023ம் தேதி 16.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தமிழ்மாறன், செல்வராணி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ6 மற்றும் அ.சா.ஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

சாட்சிகள் கொளஞ்சியம்மாள், கொளஞ்சிவேல், குமார், மகேந்திரன், செல்வராணி, தமிழரசன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் இருவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை. காயம்பட்ட கொளஞ்சியம்மாளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாலாஜி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து செய்தேன். என்னுடைய விசாரணையிலிருந்து சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் 1ம் எதிரியின் பெயர் செல்வராஜ் என்று தெரியவந்தது. அது குறித்து கனம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் ஒன்று தாக்கல் செய்தேன். மேற்படி **வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.
இத்துடன் என்னுடைய விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(b),323,506(2) of IPC and 4 of TNPHW Act படியும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் 14.05.2022 மதியம் 3 மணிக்கு மங்களமேடு காவல் நிலையத்தில் ஆஜராகி என்னிடம் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையின் படி புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக தான் பிரச்சனை ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடம் சம்மந்தமாக ஆவணங்களை கைப்பற்றி நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எதிரிகள் தாக்கியதாக சொல்லப்படும் ஆயுதங்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகள் இருவரும் புகார்தாரரை கண்ணத்தில் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் உள்ளது போல் எதிரிகள் இருவரும் புகார்தாரரை அடிக்கவும் இல்லை, திட்டவும் இல்லை என்றாலும் எதிரிகளுக்கெதிராக புகார்தாரர் இறுதி அறிக்கையில் சொல்லிய படி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின்

நெருக்கடியில் எதிரிகளுக்கெதிராக நானே புகார் மற்றும் ஆவணங்களை தயார் செய்து தவறான குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.